# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,495 —1965 සැප්තැම්බර් 3 වැනි සිකුරාදා — 1965.9.3

14,495 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 3 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. .. | 101 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 102 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | தானுவிதம் .. .. .. | 104 |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

எல். டி.—பீ 31/47

### உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம்

(262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 84 ம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 18 ந் உ.

#### கட்டளை

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 ம் பிரிவின் கீழாக்கப்பட்டு 1965 யூலை 13 ம் தேதிய 14,450 ம் இலக்க விசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளை ஒன்றன்மூலம் 1966 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் தேதி தொடக்கம் மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை மேற்கு கிராமப் பிரதேசத்துக்கான கிராமச் சபை ஒன்று அமைக்கப்படவுள்ளதாதலாலும் :

மேற்சொல்லப்பட்ட கிராமச் சபையின் உறுப்பினர்க்கான முதலாவது பொதுத் தேர்தலை 1966 ம் ஆண்டு ஜனவரி மாதம் முப்பத்தோராம் நாளின் முன்னர் நடாத்துவதற்கென விசேட ஏற்பாடு செய்வது அவசியமாயுள்ளதாதலாலும் :

இப்பொழுது இதனால் கட்டளையிடப்படுவதும் வெளியிடப்படுவதும் யாதெனில், (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தில் முரணானது எதுவேனுமிருப்பினும் மன்னார் மாவட்டத்தின் தேர்தல் உத்தியோகத்தர் ;

(அ) சொல்லப்பட்ட பொதுத் தேர்தலின் நோக்கத்துக்கான தேர்தல் இடாப்புகளை அவரால் தீர்மானிக்கப்படும் அத்தகைய தேதியில் தயாரிக்க ஆரம்பித்தல் வேண்டும்.

(ஆ) சொல்லப்பட்ட பொதுத் தேர்தலில் நோக்கத்துக்கென அக் கிராமச் சபையின் பதவிக்காலம் தொடங்குவதற்கான தேதியினைக் கவனத்துட்கொண்டு அவரால் தனது தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படும் அத்தகைய தேதிகளில் (262 ம் அத்தியாயமான) சொல்லப்பட்ட உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 22, 26, 38 ஆகிய பிரிவுகளினால் பறிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளைக் கைக்கொள்ளுதல் வேண்டும்,

என்பனவாகும்.

9-3—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

17 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 இன் 60 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக்கொண்டு, உள்ளூராட்சி உதவி அதிகாரி, வட பிரதேசம் (மேல்), யாழ்ப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான், இதன் அட்டவணையின் பத்தி I இல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணையின் பத்தி II இல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில், அந்த அட்டவணையின் பத்தி III இல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையின் பத்தி IV இல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்,
உள்ளூராட்சி உதவி அதிகாரி, வட பிரதேசம் (மேல்).

யாழ்ப்பாணம்,
1965 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 24 ந் உ.

| பத்தி 1<br>கிராமச் சபையின் பெயர் | பத்தி 2<br>திகதி | பத்தி 3<br>நேரம் | பத்தி 4<br>இடம் |
|---|---|---|---|
| பண்டத்தரிப்பு .. | 11.9.65 .. | 10.00 மு.ப. .. | கிராமச் சபை அலுவலகம் |

9-92—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

## 1952 ன் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (திட்டத் துணைவிதிகள்) கட்டளைச் சட்டம்

1952 ன் 6 ம் இலக்க உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (திட்டத்துணை விதிகள்) கட்டளைச் சட்ட சட்டத்தின் (அதிகாரம் 261) 3 ம் பிரிவின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்து எருவூர் தெற்குக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்க்காணும் தீர்மானம் அப்பிரிவின் நியதிப்படி பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 1953 எப்ரல் 10 ன் 10,517 ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, செனெற்றுலும் பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப்பட்டு, அது பற்றிய அறிவித்தல் 1953, ஒகஸ்ட் 7 ன் 10,560 ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திட்டத்துணை விதிகளின் 1 முதல் 37 சருகவுள்ள (1 ம் 37 ம் உட்பட) பாகங்களை இத்தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று எருவூர் தெற்கு கிராமச் சபை, உள்ளூர் அதிகாரத் தாபனங்கள் (திட்டத்துணைவிதிகள்) கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 261) 3 ம் பிரிவின் 1 ம் உட்பிரிவின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.

ப. சின்னத்தம்பி,
தலைவர்.

கிராமச் சபைக் காரியாலயம்,
ஆறுமுகத்தான்குடி,
1965 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந உ.

9–236—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

# துணை விதிகள்

## தங்காலை நகரசபை

### நகரசபைகள் கட்டளைச் சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153ஆம், 157ஆம் பிரிவுகளின் கீழ்; தங்காலை நகரசபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 154ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால அங்கீகரிக்கப்பட்ட துணை விதி.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 14 ந உ.

### துணை விதி

கீழ்க்காணும் தொழில்கள் அபாயமும் அருவருப்பும் விளைக்கும் தொழில்களாகக் கருதப்படும் :—

50 கலன்களுக்கு அதிக அளவில் தேங்காய் எண்ணெய் சேகரித்து வைத்தல்.

நல்லெண்ணெய் ஊற்றுதல்.
தீப்பெட்டிகள் செய்தல்.
சாக்குகள் சேகரித்துவைத்தல்.
மின்வேலைக்களம் வைத்தல்.
அச்சகம் வைத்தல்.

ஆபரணங்கள் செய்யும் தாபனம் வைத்தல்.
கொல்லுலை வைத்தல்.
உப்பிட்டு மீன் சேகரித்துவைத்தல்.
கருவாடு சேகரித்துவைத்தல்.

மீன அல்லது இறைச்சி பதனிடல் அல்லது உலர்த்தல்.
ஆலையில் மிளகாய்த் தூள் அரைத்தல்.
தூரிகைகள் செய்தல்.
இறப்பர் பதனிடல்.

கரிக்காகமரம் அல்லது சிரட்டைகள் கருக்குதல்.
பத்துக்கதிகமான வெள்ளாடுகளுக்கு காலை வைத்தல்.
வெட்டுமரம் அல்லது தேங்காய்மட்டை ஊறப்போடுதற்கு அடைப்பு வைத்தல்.

சவர்க்காரம் சேகரித்துவைத்தல்.
கெந்தகப்புகை கொண்டு கறுவா, ஏலம் அல்லது தும்பு பதனிடல்.
கள்சேர்க்கும் தானம் வைத்தல்.

மிருக வைத்தியசாலை வைத்தல.
பீடிகள் சுற்றுதல்.
சுருட்டுகள் சுற்றுதல்.
சிகரெற்றுகள் செய்தல்.

மீட்கப்பட்ட உலோகப்பொருட்கள் சேகரித்துவைத்தல்.
கரி சேகரித்துவைத்தல்.
காய்ச்சியொட்டும் வேலைக்களம் வைத்தல்.
பப்பேயின் சேகரித்து வைத்தல்.

டயர்களையும் டியூப்புகளையும் வல்கனைசுறுலொட்டும் தாபனம் வைத்தல்.
கிரேப் இறப்பர் செய்தல்.
அரிசிகுத்தும் பொறி வைத்தல்.
மோட்டார்வாகனங்கள் திருத்தும் வேலைக்களம் வைத்தல்.
விறகு சேகரித்துவைத்தல்.
வெட்டுமரம் சேகரித்துவைத்தல்.
அசற்றிக்கமிலம் சேகரித்து வைத்தல்.
செங்கல், செம்பாறுங்கல், ஓடுகள் அல்லது உடைக்கப்பட்ட கல் சேகரித்துவைத்தல்.
மைகாபதனிடல்.
பாறை அல்லது தெருக் கல் உடைத்தல்.
மின்முலாம்பூசும் வேலைக்களம் வைத்தல்.
வள்ளங்கள் கட்டும் துறைவைத்தல்.
காயகறிச்சாலை வைத்தல்.

செயற்கைப்பசளை சேகரித்துவைத்தல்.
செயற்கைப்பசளை செய்தல்.
தோல்பதனிடுஞ்சாலை வைத்தல்.
பாக்கு பதனிடல்.
இரத்தம் அல்லது கழிவு இறைச்சி அவித்தல.

சவர்க்காரம் செய்தல்.
தும்பு செய்தல்.
தும்பு சேகரித்துவைத்தல்.
தும்புக்கு சாயமேற்றுதல்.
5 அந்தருக்கு அதிகமான எந்த அளவிலும் மாசி சேகரித்து வைத்தல.

ஒரு மூடைக்கு அதிகமான எந்த அளவிலும் சுண்ணும்பு தோல்கள் அல்லது எலும்புகள் அல்லது செயற்கைப்பசளை செய்வதற்கான பொருட்கள் சேகரித்து வைத்தல்.
கொப்பரா செய்தல்.
தேங்காய் எண்ணெய் செய்தல்.

உலர்த்திய தேங்காய்த்துருவல் செய்தல்.
செங்கற்கள் அல்லது ஓடுகள் செய்தல்.
சுண்ணும்புச்சூளை வைத்தல்.
மரம் அறுத்தல்.
காரீயம் சேகரித்துவைத்தல் அல்லது பதனிடல்.

வாயுப்பானம் செய்தல்.
பனிக்கட்டித் தொழிற்சாலை வைத்தல்.
பனிக்கட்டியும் வாயுப்பானமும் செய்தல்.
காவட்டம்புல்லெண்ணெய் சேகரித்துவைத்தல்.
இலவம் பஞ்சு அல்லது வைக்கோல் சேகரித்துவைத்தல.

9–220—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

## பெல்மதுல்ல பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

பெல்மதுல்ல பட்டின சபையால், (256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம், 156 ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்டு, உள்ளூராட்சி அமைச்சரால், அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 14 ந உ.

துணைவிதி

1964 நவம்பர் 20 ந் தேதிய 14,230 ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப் பட்ட அபாயகரமானதும் அருவருப்பானதுமான தொழில்கள் சம்பந்த மான துணைவிதிகள் இதனால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :—

(1) 1 ம் துணைவிதியின் (1) ம் பந்தியை 1 ம் துணைவிதியாக திரும்ப என்ன இடுவதன் மூலமும் ;

(2) திரும்ப என்ன இடப்பட்ட முதலாம் துணைவிதியில், அதன் கண் ணுள்ள இறுதி விஷயத்தினையுடனடுத்துப் பின்வரும் புதிய விஷயங்களைச் சேர்ப்பதன் மூலமும் ;

"ஐம்பது கலனகளுக்கு மேற்பட்ட அளவில் தேங்காய் எண் ணெய் சேகரித்து வைத்தல்,

பப்படம் தயாரித்தல்"

(3) 2 ம் துணைவிதியின் (2), (3) ம் பந்திகளை முறையே துணைவிதி 2, துணை விதி 3 எனத் திரும்ப எண்ணிடுவதன் மூலமும் ;

(4) திரும்ப என்ன இடப்பட்ட 2 ம் துணைவிதியில் அதன்கண்ணுள்ள இறுதி விஷயத்தினையுடனடுத்துப் பின்வரும் புதிய விஷயங்களை (2) சேர்த்தல் மூலமும் :

றேடியோ பழுதுபார்க்கும் நிலையம் வைத்திருத்தல்.

அமுக்க விளக்குகள் வாடகைக்கு கொடுக்கும் தாபனம் வைத்தல்.

மின்லாம் பூசும் தாபனம் வைத்தல்.

9-222—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல 14,495

---

## பெல்மதுல்ல பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ), 152 ஆகிய பிரிவுகளின் கீழ் பெல்மதுல்ல பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, உள்ளூராட்சி அமைச்ச ரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

எ. ச. கொகர்லி மொர்கொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1,
1965 ம் ஆண்டு ஜூன் மீ 28 ந உ.

துணைவிதி

இதற்குள்ள அட்டவணையில் விவரிக்கப்படும் வளவுகள், (256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின 129 (ஆ) என் னும் பிரிவின் கீழ் விதிக்கப்படும் 1965 ம் ஆண்டுக்கான விசேட மலகூட வரியிலிருந்து தவிர்க்கப்படும்.

அட்டவணை

கீழ்க்காணும் வரிமதிப்பு இலக்கங்களைக்கொண்ட வளவுகள் :—

வட்டாரம் இல. 1.

இரத்தினபுரித் தெரு :—1, 3, 5, 5/எ, 7, 9, 11, 13, 13/எ, 15, 15/எ, 17, 17/எ, 19, 19/எ, 19/பி, 21, 23, 23/எ, 25, 25/எ, 25/பி, 2 , 29, 31, 31/எ, 33, 3 , 37, 39, 41, 43, 45, 45 எ, 47, 47/எ, 47/பி, 47/சி, 49, 51, 53, 55, 57, 59, 61, 63, 63/எ, 65, 6 , 69, 71, 71/எ, 71/பி, 73, 75, 77, 79, 81, 83, 85, 87, 89, 91, 93, 95, 97, 99, 101, 103, 103/எ, 105, 105/எ, 105பி, 105/சி, 105/டி, 105/இ, 105/எப, 105/ஜி, 107, 107/எ, 107/பி, 109, 109/எ, 111, 111/எ, 113, 113/எ, 115, 115/எ, 117, 119, 119/எ, 121, 121/எ, 1 1/பி, 121/சி, 123, 125, 127, 127/எ, 127/பி, 129, 131, 131/எ, 131/பி, 2, 2/எ, 20/பி, 20/சி, 22, 22/எ, 22/பி, 24, 26, 26/எ, 26/பி, 26/சி, 28, 28/எ, 28/பி, 30, 30/எ, 30/பி, 30/சி, 30/டி, 30/இ, 30/எப, 30/ஜி, 32, 32/எ, 34, 34/எ, 36, 36/எ, 38, 38/எ, 38/எ, 38/சி, 40, 42, 42/எ, 42/பி, 44, 44/எ, 44/பி, 46, 46/எ, 48, 48/பி, 48/பி, 50, 50/எ, 52, 52/எ, 54, 54/எ, 56, 56/எ, 58, 58/எ, 58/பி, 60, 62, 62/எ, 64, 64/எ.

வட்டாரம் இல. 2.

இரத்தினபுரி தெரு :—70, 70/எ, 70/பி, 70/சி, 72, 72/எ, 74, 74/எ, 74/பி, 76, 76/எ, 78, 78/எ, 80, 80/எ, 84, 84/எ, 86, 86/எ, 88, 90, 90/எ, 92, 94, 94/எ,

வட்டாரம் இல. 3.

இறக்வானை தெரு :—52/பி, 52/சி, 61/1எ, 61/பி, 61/சி, 61/டி 22/எ, 22/பி, 22/சி, 22/டி, 22/இ, 22/எப், 22/ஜி, 22/எச், 22/8, 22/1 , 22/2எ, 22/1, 22/1எ, 22/1பி, 100, 112, 112/எ, 114, 114/எ, 116, 116/எ, 118, 120, 122, 122/எ, 124, 124/எ, 126, 126/எ, 128, 128/எ, 130, 132, 134, 134/எ, 134/பி, 136, 136/எ, 138, 138/எ, 140, 142, 142/எ, 142/பி, 148, 150, 152, 154, 156, 156/எ, 158, 158/எ, 158/பி, 160, 160/எ, 162, 164, 164/எ, 166, 166/எ, 166/பி, 166/சி, 168, 168/எ, 170, 172, 172/எ, 172/பி, 174, 174/எ, 174/பி, 174/சி, 174/டி, 174/இ, 176, 178, 180, 182, 1 4, 184/எ, 184/பி, 184/சி, 184/டி, 184/இ, 186, 188, 188/எ, 190, 190/எ, 192, 192/எ, 192/பி, 192/சி, 194, 194/எ, 194/பி, 196, 196/எ, 196/பி, 196/சி, 198, 200, 200/எ, 200/பி, 200/சி, 200/டி, 200/இ, 200/எப,

வட்டாரம் இல. 4.

பலாங்கொடை தெரு :—155, 157, 157/எ, 159, 159/எ, 161, 161எ/, 161/பி, 163, 163/எ, 165, 165/எ, 165/பி, 165/சி, 167, 167/எ, 169 169/எ, 171, 173, 175, 175/எ, 177, 179, 181, 183, 185, 185/எ, 185/பி, 187, 187/எ, 187/பி, 187/சி, 189, 191, 193, 195 197, 199, 201, 201/எ, 203, 205, 207/எ, 209, 211, 213, 215, 215/எ, 217, 217/எ, 117/பி, 219, 221, 221/எ, 221/பி, 223 ;

வட்டாரம் இல. 5.

பலாங்கொடை தெரு :—2, 4, 6, 8, 10, 12, 12/எ, 14, 14/எ, 14/பி, 14/சி, 14/டி, 16, 18, 20, 22, 24, 26, 28, 30, 32, 34, 36 ;

இறக்வானை தெரு :—63/எ, 63/பி, 47/8எ, 47/8பி, 47/8சி, 73/எ, 1, 3, 3/எ, 3/பி, 5, 5/எ, 5/பி, 7, 9, 11, 13, 15, 15/எ, 17, 19, 21, 23, 25, 27, 29, 29/எ, 31, 31/எ, 33, 35, 37, 39, 41, 43, 45, 47, 49, 51, 55, 57, 59, 61, 63, 65, 66, 69, 69/எ, 71, 71/எ, 73, 75, 77, 77/எ, 79, 79/எ, 81, 83, 85 ;

கிளப் தெரு :—1, 3, 5, 7, 9, 11, 11/எ, 13, 13/எ, 15, 17 17/எ, 19, 19/எ, 21, 23, 25, 27, 27/எ, 29, 31, 33, 35, 37, 39, 41, 43, 45, 47, 47/எ, 49, 49/எ, 51, 53, 55, 55/எ, 57, 2, 4, 6 8, 10, 12, 14, 16, 18, 20, 22, 24, 24 எ, 26, 28, 30, 32, 34, 36, 38, 40, 42, 44, 46, 48, 50, 50/எ, 52, 52/எ, 52/பி, 54, 56, 58, 60, 62, 64, 66, 68, 70, 70/எ, 72, 74, 74/எ, 76, 76/எ, 76/பி, 78, 80, 80/எ, 82, 84, 86, 88, 90, 90/எ, 92, 94, 94/எ, 96, 98, 100, 102, 104, 106, 108, 110, 110/எ, 112, 114, 116, 118, 120, 122, 124, 1226, 126/எ, 126/பி, 128, 130, 132, 134, 136, 138, 140, 142, 144, 146, 148, 150, 152, 154, 156, 158, 160, 162, 164, 166, 168, 170, 172, 174, 176 ;

வட்டாரம் இல. 6.

இறக்வானை தெரு :—87, 89, 91, 93, 95, 95/எ, 95/பி, 95/சி, 97, 99, 101, 103, 105, 107, 109, 111, 113, 115, 117, 119, 121, 123, 125, 127, 129, 131, 133, 135, 137, 139, 141, 141/எ, 143, 145, 147, 147 எ, 149, 151, 153, 155, 157, 159, 161, 163, 163/எ, 165, 167, 169, 171, 173, 175, 177, 179, 181, 181/எ, 183, 185, 185/எ, 187, 189, 191, 193, 195, 197, 199, 201, 203, 203/எ, 205, 205/எ, 207, 207/எ, 207/பி, 207/சி, 209, 211, 211/எ, 213, 215, 217, 219, 221, 223, 223/எ, 225, 227, 229, 231, 233, 233/எ, 235, 237, 239, 241, 241/எ, 241/பி, 243, 245, 247, 249, 251, 251/எ, 251/பி, 253, 255, 257, 259, 261, 263, 265, 267, 269, 269/எ, 202, 202/எ, 204, 204/எ, 206, 208, 208/எ, 210, 212, 214, 216, 218, 220, 222, 224, 226, 228, 228/எ, 230, 232, 234, 236, 238, 238, 238/எ, 238/பி, 240, 242, 244, 246, 246/எ, 248, 250, 252, 254, 256, 258, 260, 262, 264, 266, 268, 270, 272, 274, 276, 276/எ, 278, 280, 282, 284, 284/எ ;

வட்டாரம் இல. 7.

இறக்வானை தெரு :—271, 273, 275, 277, 279, 281, 283, 283/எ, 283/பி, 285, 287, 289, 291, 293, 295, 297, 299, 301, 303, 305, 305/எ, 305/பி, 307, 309, 311, 313, 315, 317, 319, 286, 286/எ, 288, 288/எ, 290, 292, 294, 296, 298, 300, 302, 304, 306, 308, 310, 312, 314, 316, 318, 320, 322, 322 எ, 324, 326, 328, 330, 332, 334, 336, 338, 340, 342, 344, 346, 346/எ, 348, 350 352 ;

9-228—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

எல். டி. பி.—28/64

## நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆம், 157 ஆம் பிரிவுகளின் கீழ் சாவகச்சேரி நகரசபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவால் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அவரால் அங்கீகரிக்கப் பட்ட துணைவிதி.

எ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 14 ந வ.

### துணைவிதி

சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத்துணை விதிகளின் 20 ஆம் பாகத்து 6 ஆம் துணை விதியின் நோக்கத்துக்கு, மாதந்தோறும் சபைக்கு கொடுக்கப்பட வேண்டிய மலகூடக் கட்டணம் வாளி ஒன்றுக்கு ஒருரூபாய் ஐம்பது சத வீதமாகும்.

9-230—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியுள்ள (257 ம் அத்தியாயம் என) கிராம சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழ், வவுனியா மாவட்டத்து முள்ளியவளைக் கிராமப் பகுதிக் கிராம சபையால் ஆக்கப்பட்டு, உள்ளூராட்சி அமைச்சரால் அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

எ. ஈ. கொகர்லிமொரகொட
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 14 ந வ.

### துணைவிதிகள்

உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்

1. சபைக்கு வருமதியான எல்லா வரிகளையும் அல்லது, கட்டணங்களை யும் திரட்டுவதற்கும், அக்கிராசனரின் உருவக் கையொப்பத்தையும் சபை முத்திரையையும் கொண்ட அச்சடித்த பற்றுச்சீட்டுகளை வழங்குவதற் கும் உத்தியோகத்தர் அல்லது வேறு ஆள் எவருக்கும் அக்கிராசனர் எழுத்தில அதிகாரமளிக்கலாம்.

2. எவரேனும் வேண்டுமென்று—

(அ) அக்கிராசனரையேனும் சபையின் வேறு உத்தியோகத்தர் எவரை யேனும், கட்டளைச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட துணைவிதிகள் எவற்றினதும் ஏற்பாடுகள் எவையாலேனும் அல்லது எவற்றின்கீழேனும் அத்தகைய அக்கிராசனருக்கு அல்லது வேறு உத்தியோகத்தருக்கு அளிக்கப்பட்ட அல்லது சாட்டப்பட்ட தத்துவம், கடமை அல்லது அலுவல் எதையும் பிரயோகிக்கையில, நிறைவேற்றுகையில் அல்லது செய்கையில், அல்லது

(ஆ) சபையால் அல்லது சபைக்காக வேலைக்கமர்த்தப்பட்ட ஊழியர் அல்லது வேலையாள் எவரையும், அக்கிராசனராலேனும் சபை யின் வேறு உத்தியோகத்தராலேனும் அந்த ஊழியருக்கு அல்லது வேலையாளுக்கு சட்டப்படி விதிக்கப்பட்ட கடமை எதையும் செய்கையில், தடைசெய்யக்கூடாது.

3. இத்துணை விதிகளில்—

" சபை " என்பது முள்ளியவளைக் கிராமப்பகுதிக்கான கிராமச் சபை எனப் பொருள்படும் ;

" அக்கிராசனர் " என்பது சபை அக்கிராசனர் எனப் பொருள்படும் ;

" கட்டளைச் சட்டம் " (257 ம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

9-235—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

# நானாவிதம்

## சின்னச் செட்டிகுளம் கிழக்கு கிராமச்சபை

இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டம்.

இறைச்சிக்காரர் பற்றிய 257 ம் அத்தியாய சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன் கீழ்காணும் அட்டவணையில காணப்படுபவர்களி மிருந்து 1965 ம் ஆண்டுக்கு கசாபு தொழில் நடாத்துவதற்கு அனுமதி தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக்கின்றன. இந்த கிராம சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கப்படும் அனுமதி கொடுப் பதை மறுக்கவிரும்பினால் மறுப்பிற்கான காரணங்களை இவ்வர்த்தமானி யில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினைன்கு நாட்களுக்கிடையில் இரண்டுபிரதிகளில் எமக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளு கிறேன்.

| விண்ணப்பக்காரனின் பெயரும் விலாசமும் | வியாபாரத்தன்மை | இடம் |
|---|---|---|
| அ. நாகூர்க்கனி, மாங்குளம், நேரியகுளம் | ஆடு, மாடு இறைச்சி .. | மாங்குளம் |
| K. M. உமார், இறைச்சிக்கடை, வவுனியா | ஆடு, மாடு இறைச்சி .. | செட்டிகுளம் |

கி. ச. அக்கிராசனர்.

கிராமச் சபைக் கந்தோர்,
சின்னச்செட்டிக்குளம் கிழக்கு.

9-20?—3.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,495

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடை யிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. "நகலை" கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்ருல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962 ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | | | ரூ. ச. |
|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | ... | ... | ... | 10 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | | ... | ... | 10 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | | ... | ... | 110 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | | ... | ... | 220 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.8.63 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | | | | உள்ளூர் | | வெளியூர் |
|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. ச. | | ரூ. ச. |
| ஒவ்வொரு பகுதியும் | ... | ... | ... | 27 50 | ... | 40 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு | ... | ... | ... | 17 50 | ... | 23 00 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் | ... | ... | ... | 25 00 | ... | 33 00 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | சதம் | | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 30 | ... | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... | 60 | ... | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 15 | ... | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 30 | ... | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை வாழைச்சேனை எம்பரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.